தொகுதியைக் கூடச் சொல்லலாம். கடந்த நான்கு ஆண்டுகளாக இடம் ஒதுக்கப்பட்டு, பணம் கட்டப்பட்டு, அரசாங்கத்தால் அதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டும், இதுவரையில் கட்டடம் கட்டப்படவில்லை. அது கட்டப்படுமா ? இதுபோன்ற நிலைமை தமிழ்நாடு முழுவதும் இருந்தால் அவற்றை உடனடியாக கட்டுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு பார்ட் - 2 ஸ்கீமின் போது முதலில் 30 கட்டடங்கள் கட்டுவதற்கு மட்டும் தான் பணம் ஒதுக்கப்பட்டது. ஆனால் விவாதத்தின் போது—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஸ்டாண்டிங் பைனான்ஸ் கமிட்டி என்று நடக்கும் - அந்த கமிட்டியிலே விவாதிக்கிறபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் தெரிவித்தோம். மொத்தம் 70 இடங்களில் எங்களுக்கு இடம் தயாராக இருக்கிறது, ஆனால் 30 இடங்களுக்கு மட்டும் தான் பணம் நிதித்துறை ஒதுக்கித் தருவதாக சொல்லி இருக்கிறார்கள் என்று நாங்கள் தெரிவித்தவுடனேயே 70 இடங்களுக்கு உண்டான பணத்தை முழுமையாக ஒதுக்கி, எங்கெங்கே இடம் இருக்கிறதோ அத்தனை இடங்களுக்கும் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டுவதற்கு நீங்கள் பணத்தை ஒதுக்கித் தாருங்கள் என்று உத்தரவிட்டு, கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுவிட்டது. இப்போது அந்த வேலைகள் தொடங்குகிற தருவாயில் இருக்கிறது. எனவே, எத்தனை இடங்களில் இடம் இருந்ததோ அத்தனை இடங்களுக்கும் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது. இந்த ஆண்டு, அதேபோல முயற்சி எடுத்து இடங்களைப் பெற்று இருக்கிறோம். இந்த இடங்களுக்கு வருகிற நிதியாண்டிலே பணம் ஒதுக்கப்படும். அதிலே கட்டடம் கட்டப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 64, திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

64—

மருத்துவர்கள் தங்க கட்டிடம் கட்டுதல்.

***36504*—திரு. கி. தருமலிங்கம் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[*1995 நவம்பர் 9*

(அ) வேலூர் வட்டம், மராட்டிப்பாளையம் அரசினர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் தங்கும் இடமின்மையால், மருத்துவர்கள் அங்கு தங்குவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், நிரந்தரக் கட்டிடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) அரசு அறியும்.

(ஆ) இங்கு மருத்துவ அலுவலர் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு தற்சமயம் ஏதுமில்லை. எதிர்காலத்தில் இது பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணைக்கட்டு தொகுதியில் மராட்டிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர் குடியிருப்பு இருந்து, தற்போது மிக மோசமான நிலையில், குடியிருக்க இயலாத அளவுக்கு, அந்தக் குடியிருப்பு பழுதுபட்டுவிட்டது. ஆகவே, அங்கேயிருக்கும் மருத்துவர்கள் பணியை முடித்துவிட்டு 40 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கும் வேலூருக்கு வந்துவிடுகிறார்கள். மகப்பேறு சிகிச்சைக்கு வருகிற தாய்மார்கள் மிகவும் சிரமப்படுவதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்த மருத்துவர் குடியிருப்பைக் கட்டிக் கொடுத்தால் அந்தப் பகுதியில் மருத்துவர் தங்குவதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, உடனடியாக இதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் இது பஞ்சாயத்து யூனியன் டிஸ்பென்சரியாக இருந்து ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றப்பட்டிருக்கிறது. எனவேதான் அந்தக் கட்டடம் மிகப் பழமையான கட்டடமாக இருக்கிறது. அங்கே 91 செண்ட் இடம் அதற்கு இருக்கிறது. இப்போது இந்த மருத்துவமனைக்கு கட்டடம் மட்டும் இருந்து கொண்டிருக்கிறது. நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, நிதிப் பிரச்சினையின் காரணமாக தமிழகம் முழுவதும் ஏறத்தாழ 1,417 ஆரம்ப சுகாதார நிலையங்கள் இருக்கின்றன - இதிலே எங்கெங்கே கட்டடம் இல்லையோ முதலில் மருத்துவமனைக்கு கட்டடம் கட்டுவது என்றும், அதைத் தொடர்ந்து அதற்குப் பின்னால் மருத்துவர்களுக்கும் மற்ற பணியாளர்களுக்கும் குடியிருப்பு கட்டுவது என்றும் அரசாங்கம் முடிவு எடுத்திருக்கிறது. இந்த இடத்தைப் பொறுத்தவரையில்,

1995 நவம்பர் 9]

மருத்துவர்கள் ஒருவேளை அவர்களுக்கு அரசின் சார்பாக குடியிருப்பு ஒதுக்கவில்லை என்றால் அவர்கள் அந்த மருத்துவமனையைச் சுற்றி 8 கிலோ மீட்டருக்குள்ளே குடியிருக்க வேண்டுமென்று ஒரு விதிமுறை இருக்கிறது. நிச்சயமாக அதற்குள்ளே அவர்களுக்கு வீடு கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, அப்படி இல்லாமல் அவர்கள் 40 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து வருவார்கள் என்று சொன்னால் அவர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவர்கள் அதற்கு அருகிலே குடியிருக்க வேண்டுமென்று வற்புறுத்தப்படும். எனவே, கட்டடங்கள் கட்டுவதைப் பொறுத்தவரையில் எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவத் துறையில் இன்று மக்களை நாடி மருத்துவம் சென்று கொண்டிருக்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 8 கிலோ மீட்டர் தூரத்திற்குள் தங்க வேண்டுமென்று விதிமுறை இருப்பதாகச் சொன்னார்கள். அந்தப் பகுதியில் குடிசைவாழ் மக்கள் அதிகமாக இருப்பதால் மருத்துவர்கள் தங்கும் அளவுக்கு அந்த கிராமத்தில் எந்தக் குடியிருப்பும் இல்லை. ஆகவே, அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கூட முடியாத நிலை இருக்கிறது. எனவே இதற்கு ஒரு சிறப்பு நிதியாக ஒதுக்கித் தந்து, இப்படிப்பட்ட மலைப் பகுதிக்கு, கிராமப் பகுதிக்கு நிதி ஒதுக்கி குடியிருப்புகள் கட்டித்தர முன்னுரிமை தந்து, அதிலே மராட்டிப்பாளையம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு எப்போது நிதி ஒதுக்குவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறையிலிருந்து பணம் கிடைக்கிறபோது, அதற்கு ஒதுக்கப்படும். இப்போது, இண்டரிம்-ஆக, ஏதாவது ஏற்பாட்டைச் செய்ய முடியுமா என்பதைப் பற்றி அரசு ஆய்வு செய்யும். சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடத்திலே உடனடியாக இதைப் பற்றிப் பேசி, பக்கத்திலே வீடுகள் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிறதா, இல்லையா என்பதைப் பற்றி ஆய்வு செய்வதற்கான நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக் கொள்கிறோம். ஒருவேளை 8 அல்லது 15 கிலோ மீட்டருக்குள்ளே வீடுகள் கிடைக்காத நிலைமை இருக்குமானால் நிச்சயமாக அடுத்த ஆண்டு, இதை ஒரு சிறப்பு நேர்வாக எடுத்துக் கொண்டு, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.